[1994 ஏப்ரல் 29

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு கொடுப்பதல்ல. வழக்கறிஞர்கள் ஒவ்வொரு வழக்குக்கும் இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, இப்போது 60,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை ஒரு இலட்சமாக ஆக்க வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சங்கம் — பார் கவுன்சில் — கேட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு நல்ல முடிவெடுப்பார்கள். ஆனால் அதற்கு மத்தியிலே என்னைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோள். இங்கே பேசிய வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களுடைய குறைகளை மட்டும் சொன்னார்கள். அவர்கள் சில கடமைகளையும் செய்ய வேண்டும். 25,000 வழக்கறிஞர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தில் 7100 பேர்கள்தான் இன்றைக்கு உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர், திரு. ஞானசேகரன் அவர்களை கேட்டுக்கொள்வது, நீங்கள் மிகுதியாக இருக்கிறவர்களையும் உறுப்பினர்களாக்கினால் 1 இலட்சம் அல்ல, 2 இலட்சம் அல்ல, 3 இலட்சம் ரூபாய் கூடக் கொடுக்கலாம். உங்களுக்கு நிதி சேரும். இன்றைக்கு இருக்கின்ற வழக்கறிஞர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கினால் அவர்கள் சந்தா செலுத்துவார்கள். ஸ்டாம்ப் ஃபீ செலுத்துவார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 இலட்சம் ரூபாயை அந்த 'கார்பஸ் பன்ட்'-க்கு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே 25,000 வழக்கறிஞர்களில் இன்னும் 18,000 பேர்கள் உறுப்பினர்கள் ஆகாமல் இருந்து கொண்டு, 1 இலட்சமாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, தயவு செய்து முதலிலே அவர்களை உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா. எண் 442, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

**442—**

**ஆண்டிமடம் புக்குழி கிராமத்திற்கு நியாய விலைக்கடை அமைத்தல்**

***13025—திரு. ஆர் தங்கராஜ்:**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, புக்குழி கிராமத்திற்கு ஒரு நியாய விலைக்கடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1994 ஏப்ரல் 29]*

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டிமடம் தொகுதி புக்குழி கிராமத்தில் அழகாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் சிலம்பூர் நியாயவிலைக் கடையை பிரித்து 300 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 16-6-93 முதல் செயல்பட்டு வருகிறது.

*திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்ட பிறகு, அங்கே பகுதி நேர கடை திறக்கப்பட்டிருக்கிறது. சிலம்பூர் கிராமத்திலிருந்து புக்குழி கிராமம் 5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. அங்கே சரியான சாலை வசதிகள் இல்லை. எனவே, அந்தப் பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300 குடும்ப அட்டைகள்தான் அந்தக் கிராமத்திலே இருக்கிறது. ஆகவேதான் பகுதி நேரக் கடை திறக்கப்பட்டிருக்கிறது. தனியாக முழு நேரக் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமானால் குறைந்தபட்சம் 800 அட்டைகள் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இப்போது அப்படிப் பார்க்க முடியாமல், அந்த விதிகளை எல்லாம் மீறிக்கூட சுமார் 69 சதவிகிதம் — 15,338 கடைகள் இப்போது தழிகத்திலே 800 அட்டைகளுக்கும் குறைவாக உள்ள கடைகளாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இப்படிக் குறைந்த அளவிலே அட்டைகளைக் கொண்ட கடைகளை மேலும் திறப்பதற்கு அரசு மிக அதிகமான செலவைச் செய்ய வேண்டியதொரு சூழ்நிலையில், இப்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தமிழகம் முழுவதும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற விருப்பத்தைக் கேள்வியின் மூலம், கோரிக்கையின் மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே மிகவும் அக்கறை எடுத்து,கிராமப் பகுதிகளில், குறிப்பாக குக்கிராமப் பகுதிகளில் அதிக அளவுக்கு குடும்ப அட்டைகள் இல்லை என்றாலும், அங்கேயெல்லாம் தனியாகக் கடைகள் திறப்பதற்கு எப்படிச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாக ஆராயவேண்டுமென்று அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதையொட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கருத்து கேட்கப்பட்டுள்ளது. ஆகவே மிக விரைவில் இப்படிப்பட்ட குக்கிராமப் பகுதிகளில் குறிப்பாக பெண்கள் அதிக தூரம்

[1994 ஏப்ரல் 29

சென்று இந்த உணவுப் பொருள்களை வாங்குகிற சூழ்நிலையிலிருந்து அவர்களைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு மிகத் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஒட்டி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

*திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படுகிறபோது, அந்தக் கடைகளுக்குக் கொண்டு செல்லப்படுகிற அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை, ஆகிய பொருட்களை கொண்டு செல்கிறபோது, அதற்கு உண்டான வண்டி வாடகையையும், அதை வைத்து விற்கப்படுகின்ற இடத்தையும் கிராமப் பொதுமக்கள் கொடுத்தால்தான் முடியும் என்ற நிலையை அரசு எடுத்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது, பல்வேறு கிராமங்களில் பிரச்சினை எழுகிறது. எனவே அந்த வண்டி வாடகையையும் அந்த இடத்திற்குரிய வாடகையையும் அரசு தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை இந்த நேரத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கவேண்டுமானால், அங்கே அந்தக் கிராமத்தில் அந்தக் கடையை நடத்துவதற்கான இடத்தை அந்தக் கிராம மக்கள் இலவசமாக வழங்கவேண்டுமென்றுதான் விதி இருக்கிறதே தவிர, போக்குவரத்துச் செலவுக்காக அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற விதி இல்லை. அப்படி யாரும் வாங்கக் கூடாது. அதைக் கூட்டுறவு துறைதான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி யாராவது அங்கே வருகிற பகுதிநேர நியாயவிலைக் கடையில் பணிபுரிவோர்கள் அல்லது அந்த கிராமத்திற்கு அந்த சரக்குகளைக் கொண்டு வருகிறவர்கள் போக்குவரத்துச் செலவுக்கும் வேண்டுமென்று கேட்டால் அதை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அந்தக் கடைகளை அந்த கிராம மக்கள் இலவசமாகத் தரவேண்டும் என்பதுதான் விதி. அதுதான் இப்போது நடைபெற்று வருகிறது. இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை எப்படி, இந்தக் கஷ்டத்திலேயிருந்து மக்களை விடுவிப்பது என்பதைப் பற்றி, துறை மிகத் தீவிரமாக ஆராயவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*1994 ஏப்ரல் 29]*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 443, டாக்டர் எம்.பி.சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**443—**

**குடிசைப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்தல்.**

***21689—டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைப் பகுதி மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கின்ற வகையில் சுகாதாரம் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

ஏற்கெனவே நடத்தியிருக்கிற 10 மருத்துவ முகாம்கள், குடிசைப் பகுதிகளிலேயும் இடம் பெற்றிருக்கின்றன. இப்போது நடந்துகொண்டிருக்கின்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்களும் குடிசைப் பகுதிகளிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் ஏற்படுத்தப்படுகின்ற மருத்துவ வசதிகள் அனைத்தும் குடிசைப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் பயன்படுகின்ற வகையிலேதான் அமைகிறது என்ற காரணத்தால் தனியாக இதற்கு திட்டம் அவசியம் இல்லை.

***டாக்டர் எம். பி. சேகர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே பெரிய மறுமலர்ச்சியை எல்லாம் ஏற்படுத்தி மக்கள் மற்றும் மருத்துவத்துறையில் உள்ள எல்லோராலும் ஏகமனதாகப் பாராட்டப்பட்டுவரும் நமது திறமை மிக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் முன் நின்று நடத்துகின்ற இந்த நமது மாண்புமிகு முதல்வர், the most super Chief Minister டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரால் நடத்தப்பட்டு வரும் இத் திட்டத்தினால் ஏழை எளிய நடுத்தர வர்க்க தாய்மார்களும் குழந்தைகளும், பள்ளி மாணவர்களும் — 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களும்— பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ஒரு வாரியம் அல்லது தனி இயக்ககம்-டைரக்டரேட் - அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக தனி வாரியமோ அமைப்போ தேவையில்லை.